முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 989

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.06.2022, செவ்வாய்கிழமை

1. மாதவராஜனே அரங்கா போற்றி
மக்களை காக்க வந்த தேசிகா போற்றி
பூதலத்தில் சுப்ரமணியர் யானும்
புகலுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது விடை திங்கள்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 31 ம் நாள், 14.06.2022 செவ்வாய்கிழமை)
அருளுவேன் அரங்கன் சக்தி பெருக
வாசிவென்ற ஞானியர் படைகளெல்லாம்
வல்லமைகூட்டி அரங்கன் உன்பால் இருக்க
3. இருக்கவே ஆறுமுகப்பெருமான் யானும்
இணைந்து நித்தம்நித்தம் உந்தனுக்கு
துணையாக சக்திபல ஊட்டிவர
தொடர்ந்து அரங்கன் உன்தர்மம் தேசமெல்லாம் விரிவாகப் பரவ பரவ
4. இடரின்றி உலகம் மேன்மை காணும்
எல்லா மக்களும் தர்மவான்களாக சிறந்து
சிறந்துமே கலியுகம் மாற்றம் பெறும்
சிறப்பான ஞானயுக சக்திபெறும்
5. ஆகவே அரங்கன் காட்டும் அற்புதமான வழிகளை அகிலம் பின்பற்றி வர
வரங்களாக மக்களுக்கு சக்திகூடி வையகம் தனித்துவம் காணும்
காணவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
கருணைமிக்க அரங்கன் மார்க்கமே உயர்ந்த மார்க்கம்
6. மார்க்கம் தனை உலகோர் மனமுவந்து ஏற்று
மண்ணுலகில் பின்தொடர்ந்தால் போதும்
தேக்கமின்றி உலகோர் கடைதேற்றம் பெறுவதோடு
தெரிவிப்பேன் பேருலகம் ஞான ஆட்சி காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–